திருச்சிற்றம்பலம்



திருக்கேதீஸ்வரம் கோபுரவாசல்

## வருக ! வணக்கம்!!

எல்லாம் வல்ல அபிதகுஜாம்பாள் சமேத அருணேஸ்வரப் பெருந்தகையின் திருவருளால் வேதத்ததின் சாரமாக விளங்கும் திருமுறைகளைப் போற்றிப் பேணிப் பரவும் நோக்குடன் இரண்டாவது உலகத் திருமுறைப்பெருவிழாவை இலண்டன் சிவன் கோவிலிலே செப்டம்பர் 19ம் திகதியன்று ஆரம்பித்து தொடர்ந்து 20ஆம் 21ஆம் திகதிகளில் “செட்ஜ்கில்” பாடசாயைின் கலைப்பேரரங்கிலே நடைபெறத் திருவருள் கைகூட்டியுள்ளது.

இப்பெருவிழாவிற்கு வருகை தந்திருக்கும் இறையன்பர்களே! ஆதீன அருளாளர்களே!! பேருரைகள் வழங்க வருகைதந்திருக்கும் அருட்பேரறிஞர் பெருமக்களே!! உங்கள் அனைவரையும் பெருவிழாவின் ஏற்பாட்டுக்குழு இருகரம் கூப்பி வருக வணக்கம்!! என்று அன்புடன் வரவேற்கின்றோம். இப்பெருவிழாவிற்கு நேரிலே கலந்து கொள்ள முடியாது வருந்தும் அடியவர்கள் ஆய்வுக் கட்டுரையாளர்கள், கலைஞர்கள் மற்றும் இணையத்தளங்களினூடாக இணைந்து கொண்டிருக்கும் பெருமக்களையும் எமது குழு அன்புடன் வரவேற்கின்றது.

மலேசிய இந்து சங்கத்தினால் 2013 செப்டம்பர் 13 முதல் 15 வரை கோலாலம்பூரில் வெகு விமரிசையாக இடம்பெற்ற முதலாவது திருமுறைமகாநாட்டின் தொடர்ச்சியாக இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் ஆதரவுடன் இப்பெருவிழாவினை ஏற்பாட்டுக்குழு மேற்கொண்டுள்ளது என்பதனை மிகுந்த பேருவகையுடன் அறியத்தருகின்றோம்.

இருபத்து ஏழு இறையருளாளர்களால் பாடப்பெற்றவை பன்னிரு திருமுறைகள். ஈழநாட்டின் இரண்டு சிவாலயங்களையும் தமிழ்நாட்டின் காவிரிக் கரைகளிலும், அதற்கப்பால் உள்ள சிவன் கோயில்களையும், கயிலாயத்தையும் சிறப்பித்துப் போற்றும் திருப்பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும். ஆயிரக்கணக்கான திருமுறைப் பாடல்கள் காலத்தால் அழிந்து போயின. இன்று எங்களுக்குக் கிடைத்துள்ளவை, எஞ்சியிருப்பவை 276 சிவாலயங்களைப் புகழ்ந்து பாடப்பெற்ற 18246 திருமுறைகள் மட்டுமே. இவ்வாறு எஞ்சியிருந்த அரும்பெரும் பாடல்களைப் பதினொரு திருமுறைகளாக வரிசைப்படுத்தி அமைத்துத் தந்தவர் 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்பியாண்டார்நம்பி

அடிகளாவார். இவர் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால் இந்தப் புண்ணியப் பணியைச் செய்தார்.

பதினொரு திருமுறைகளாக இருந்த அருட்பாடல்கள் 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் எழுதிய பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்துடன் பன்னிரு திருமுறைகளாகத் திகழ்கிறது.

1133-1150 ஆண்டுகளில் அரசு செய்த இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னனின் முதலமைச்சராக இருந்தவர் சேக்கிழார் பெருமான். அவருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். போர்ச் சூழல்கள் அகன்று சீரும் செழிப்புமாக இருந்த தமிழகத்தின் இக்காலப்பகுதியில் இரண்டாம் குலோத்துங்க மன்னன் சிருங்கார ரசனை அதிகமுள்ள சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களைப் படித்து மகிழ்ந்து வந்ததைக் கண்டார் அவனுடைய முதலமைச்சர் அருண்மொழித்தேவர் சிற்றின்ப இலக்கியங்களால் மனம் ஈர்க்கப்பட்ட இரண்டாம் குலோத்துங்க சோழப் பேரரசனை இறையருள் மிக்க நூல்களில் ஈடுபடச் செய்த பெருமை அருண்மொழித்தேவராகிய சேக்கிழாரைச் சேரும். சிவனடியார்களின் அருமையையும் சிவபெருமானின் அன்பையும் விளக்கிச் சொன்ன தனது முதலமைச்சரிடம் அடியார் பெருமையை அழகுத் தமிழில் எழுதும் பணியை ஒப்புவித்தான் மன்னன். அரசனின் வேண்டுகோளின் படி சிதம்பரம் நடராஜப் பெருமானின் திருவருளால் ‘‘உலகெலாம்’’ என அடியெடுத்துக் கொடுக்கப் பெற்று எழுதப்பட்ட பக்தி இலக்கிய நூலைக் கேட்ட மன்னன் தெய்வப்புலவர் சேக்கிழாருக்கு ‘‘தொண்டர்சீர் பரவுவார்’’ என்ற சிறப்புப்பட்டத்தை அளித்து பெருமை செய்தான். சேக்கிழாரின் பெரிய புராணம் அன்று முதல் திருமுறைகளின் வரிசையில் பன்னிரண்டாவதாக வைத்து போற்றப்படுகிறது.

இந்தத் திருமுறைப் பெருவிழாவின் முக்கியமான நோக்கங்களாவன:

01. திருமுறை குறித்த அறிவினையும் விழிப்புணர்வையும் பல்வேறுநாடுகளிலும் வசித்துவரும் சைவப்பெருமக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குப் பரப்புதல்.

02. ஆலயங்களிலும் எமது இல்லங்களிலும் திருமுறை வழிபாட்டை உறுதியாக்கல்.

03. மேற்கண்ட குறிக்கோள்களுடாக திருமுறை கண்ட சைவநெறியில் கூறப்பட்ட உண்மைகளைத் தெளிவுசெய்து அவற்றை எமது நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடித்தல். அதன்மூலம் மானிடம் போற்றும் கொள்கைகள் திருமுறைகளில் நிரம்பியிருக்கும் உண்மையை உலகறியச் செய்தல்.

04. இப்பெருவிழாவில் இடம்பெறுகின்ற உன்னதமான சைவசித்தாந்தக் கொள்கைகளை உள்ளடக்கிய சமயச் சொற்பொழிவுகள், சிறப்புமலரில் ஆய்வுகள் அடங்கிய கட்டுரைகள் ஆகியவற்றினூடாகவும், திருமுறைப் பண்ணிசையைப் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்வதன் மூலமாகவும் எமது இறைபக்தியையும் தெளிந்த சமய அறிவையும் உறுதிப்படுத்தல்.

05. இவ்வாறு சைவ வாழ்க்கை நெறியை நன்கு உணர்ந்து நாம் கடைப்பிடிப்பதன் மூலம் எமது வாழ்க்கையைச் சீரப்படுத்தி எமது பிள்ளைகளுக்கும் பின்வரும் சந்ததிகளுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருத்தல்.

06. தேனினும் இனிய செந்தமிழை முத்தமிழாக இப்பெருவிழாவிலே கொண்டாடி இழைஞர்களிடையே தமிழர் பண்பாட்டின் பெருமையையும் மகத்துவத்தையும் நன்கு உணரச்செய்தல்.

உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!!